கொட்டைக்காடு நொச்சியம்பதி
விநாயகருக்கு சமர்ப்பணம்



அமரர்

# கந்தசாமி கணேசராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

27.07.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# கந்தசாமி கணேசராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

27.07.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
அன்போடும், பண்போடும், பாசத்தோடும்
எமை வழிநடத்தி எம்மை நல்வழியில்
நடாத்தி எமக்காகவே வாழ்ந்த தெய்வம்
நாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ
ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை காட்டிவிட்டு
என்றும் அணையாத தீபமாய் இம் இதயத்தில்
சுடர்விட்டுக்கொண்டிருக்கும் ஒளிவிளக்கே
வானுறையும் தெய்வமாகிய உமது
பொன்னடிகளில் பணிவோடு
இம் மலரினை அர்ச்சிக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளோடு வாழும்

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோற்றம்
24.03.1934

மறைவு
27.06.2022

அமரர்

# கந்தசாமி கணேசராசா

(சிறைச்சாலை உதவி அத்தியட்சகர், சமாதான நீதவான்,
அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்)

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டது சுபகிருது வருடம் ஆனியில்
பூண்டசீர் சதுர்த்தசி திதியில்
நீண்ட புகழ் கந்தசாமி கணேசராசா
விண் புகுந்து இறைவனடி சேர்ந்த நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழு தெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

ஈசனே என் எம்மானே எந்தை
பெருமாள் என்பிறவி
நாசனே நான் யாதும் ஒன்று
அல்லாப் பொல்லா நாயான
நீசனேனை ஆண்டாய்க்கு
நினைக்கமாட்டேன்
கண்டாயே தேசனே அம்பலவனே
செய்வது ஒன்றும் அறியேனே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாட ரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
யெங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகு திருவாரூரின்
மழவிடையார்க்கு வழிவழியாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியாரொடும் கூடியெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமோ டவல் பொரி
கப்பிய கரிமுகன் - அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை - கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொருள் திரள்புய - மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு - பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய - முதல்வோனே
முப்புர எரி செய்த அச்சிவ நுரை ரதம்
அச்சது பொடிசெய்த - அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை - இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் - பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கந்தசாமி கணேசராசா அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தென திகழும் இலங்கை மாதாவின் சிகரமென தோன்றும் யாழ்ப்பாணத் தீபகற்பகத்தில் எழில் கொஞ்சும் இயற்கை அமைப்புக்களையும், அருள் பொழியும் நொச்சியம்பதி விநாயகரது திருத்தலத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் கொட்டைக்காட்டிலே வட்டுக்கோட்டை உயர்குல திலகர் தினநாயக முதலியார் மரபில் தோன்றிய நாகநாதர் கந்தசாமியினதும் அராலி மேற்கு கொட்டைக்காடு உயர்குடி வேளான் குலதிலகம் கந்தையா சின்னம்மாவினதும் சிரேஷ்ட புத்திரர் அமரர் க.கணேசராசா (Rtd.Assist supdt of Prison) 24.03.1934 ஆம் ஆண்டில் பிறந்தார். இவரிற்கு அமரர் சி.மங்கையற்கரசி, அமரர்க.வரதராசா (Rtd.Auditor ceylon Tobacco company), அமரர் க.நாகநாதர் (பண்டிதர்) (Rtd.Auditor M.P.C.S union Vali-west), திரு.க.பத்மநாதன் (Rtd.Police officer) என்போர் உடன்பிறப்புக்களாக அமைந்தனர்.

இவர் தனது இளமைக்கல்வியை யாழ் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தொடங்கி SSC வரையில் படித்து சிறப்பாக தேர்ச்சியடைந்தார். அக்காலத்திலே சிறந்த மல்யுத்த வீரராகவும் யாழ் வட்டு இந்துக்கல்லூரி உட்பட பல்வேறு மேடைகளில் தனது திறமைகளை காண்பித்தார். மல்யுத்த கலையில் சிறந்து விளங்கியதால் மல்யுத்த பயிற்றுனராகவும் இருந்தார். பின் தனது குடும்பத்தின் வறுமை காரணமாக பெற்றோரிற்கு மூத்தமகனாக உதவவேண்டும் என்பதற்காக தனது 17வது வயதினிலேயே தான் கற்ற கல்வியோடு தொழில் வாய்ப்பை தேடும் முயற்சியில் இறங்கினார். இதன் விளைவாக அக்காலத்தில் மதிப்பு வாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை இராணுவத்தில் இணைந்து நெடுந்தீவில் பணியாற்றினார். அங்கு குதிரை சவாரி உட்பட பல கலைகளை கற்றார். (பின் இராணுவத்திலிருந்து விலகி (welfare officer) பணியாற்றினார்.

இவ்வாறு இவரின் இளமைப்பருவம் நகர்ந்துசெல்ல இவர் அழகும், ஆற்றலும், அறிவும், ஆளுமையும் கொண்ட வாலிப பருவத்தை அடைந்தார். அப்போது அவருக்கு திருமணம் செய்து கொடுத்து இல்லற பந்தத்தில் ஈடுபடுத்த விரும்பிய பெற்றோர் ஏற்றதொரு இல்லத்தரசியை தேடி சீரிய வேளான் மரபினர் வழியிற் தோன்றிய முதலித்தம்பியின் பேரனும் சுப்பிரமணியத்தின் மகனுமாகிய திரு.சு.ஆறுமுகத்திற்கும் (Rtd.Clerk of works Malaya) வளமிகு வட்டுக்கோட்டையில் உயர்குலத்திலகர் தினநாயக முதலியார் உயர்குல திலகர் பிரபு இராசவல்லப முதலியார் என்பவர்களின் மரபில் தோன்றிய நகுலாம்பிகைக்கும் இரண்டாவது புதல்வியான அமரர் க.இந்திராணி அவர்களை 1964ம் ஆண்டு திருமணம் செய்து வைத்தனர். இதன்மூலம் ந.அன்னரட்ணதேவி, மு.ஞானரஞ்சிதமலர், அமரர் ஆ.சிவகுமார் ஆகியோரை மைத்துனராக பெற்றார்.

"மங்களம் என்பது மனைமாட்சி மற்றதன் நன்கலன் நன்மக்கட் பேறு" என்ற திருவள்ளுவர் மொழிக்கிணங்க இவர்கள் தயாபரன் (சாரதி chulippuram express), சிறிதரன் (U.S.A), கருணாகரன் எனும் மூன்று அழகிய ஆண்குழந்தைகளை பெற்றனர்.

பின்னர் இவர் கோட்டை (யாழ்ப்பாணம்), அனுராதபுரம், வெலிகட (கொழும்பு), மட்டக்களப்பு ஆகிய இடங்களில் சிறைச்சாலை ஆணையாளராக கடமையாற்றி கொழும்பில் பணி புரியும்போது பதவியுயர்வு பெற்று சிறைச்சாலை உதவி அத்தியட்சகராக ஓய்வு பெற்றார். இதை தவிர சமாதான நீதவானாகவும் (JP), அரச அங்கிகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளர் (மும்மொழி), மத்தியஸ்தர் சபை நீதவான் - கொழும்பு, மூளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றிலும் பணியாற்றினார். ஓய்வு பெற்ற பின்னரும் மட்டக்களப்பு சிறைச்சாலை திணைக்களத்தில் பகுதிநேர உதவி ஆணையாளராக பணியாற்றினார்.

மூத்த மகன் திரு.க.தயாபரன் சுழிபுரம் ராசபட்சம் மரபு வழித்தோன்றிய சுப்பிரமணியம் நல்லதம்பி (Rtd.Principal) அவர்கட்கும் அவ்வூரை சேர்ந்த சின்னக்குட்டி நாகம்மா அவர்கட்கும் பிறந்த கனிஷ்ட புத்திரி, த.கலாராணியை திருமணம் செய்ததின் பலனகா கஜாழினி, காயத்திரி எனும் இரு குழந்தைகளுக்கு தந்தையானார். இரண்டாவது மகன் திரு.க.சிறிதரன் கைதடியை சேர்ந்த உயர் வேளாண்குடி மரபில் தோன்றிய கா.வே.முத்துக்குமாரசுவாமி (Rtd.Assist General Manager, BOC) அவர்களதும் அவ்வூரை சேர்ந்த திருமதி.மு.யோகம்மா அவர்களதும் சிரேஷ்ட புதல்வி கௌரியை திருமணம் செய்ததன் பலனாக ரிமாலினி, பிரதுர்ஷன் எனும் இரு குழந்தைகளுக்கு தந்தை ஆனார்.


இவ்வாறு தனது பிள்ளைகள் நன்கு வளர்ந்து அவர்களுக்கான அழகிய வாழ்க்கைப் பாதைகளை அமைத்துக்கொடுத்த அமரர் க.கணேசராசா அவர்கள் இறுதி வரையிலும் யாரிக்கும் சிரமம் கொடுக்காமல் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்த போதிலும் காலப்போக்கில் சிறிது உடல் நலம் குன்றி 2022ஆம் ஆண்டு ஆனி மாதம் 27ம் திகதி திங்கட்கிழமை இரவு 8.25 மணிக்கு இறைவனடி சேர்ந்தார். அன்னார் எம் எல்லோரையும் விட்டுச்சென்றாலும் அவரின் நினைவுகளை மனதில் ஆழப்பதித்து சென்றுள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் துதி செய்வோமாக.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னார் இராணுவத்தில் பணிபுரிந்தபோது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னாரின் திருமண நிகழ்வின்போது...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் மனைவியுடன் முதுமைக் காலத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேர்த்தி புலம்பல்

பார்ப்போரை கவரும் தோற்றமும், கம்பீரக்குரலும்
தன்னை நாடி வந்தோரை வாழ வைக்கும் குணம்
கல்வியோடு பல கலைகளையும் கற்று எல்லையின்றி உழைத்து
அவற்றை எண்ணும்போதெல்லாம் எம் மனதை சிலிர்க்கவைத்து
சென்ற எம் அன்பு அப்பப்பாவே!
உங்களோடு கூடி வாழும்போது வரும் பாசத்தைவிட
உங்கள் நினைவோடு வாழும் பாசம் அதிகமென அறிந்தோ
உங்கள் அருகில் எமக்கான நேரத்தை குறைத்திட்டீர் அப்பப்பா!
ஒரு தேசத்தில் வாழ்ந்தாலும் பிறதேசத்தில் வாழ்வதுபோல்
நாம் கூடி கழித்த தருணங்கள் சிலவாயினும் அத்தருணங்களை
உருவாக்கிய நினைவுகளின் கனத்தையே
எம்மால் தாங்க முடியவில்லையே இதனை தாங்கள்
முன்போ அறிந்தோ தருணங்களை சிலவாக்கினீர் அப்பப்பா!
ஊர் என்ன சொன்னாலும் யார் என்ன சொன்னாலும் எம்
மனதிற்கு சரி என தோன்றுவதை தைரியமாகவும், சுதந்திரமாகவும்
செய்வதற்கு கற்றுக்கொடுத்தீர்கள்
உங்கள் வாழ்க்கை வரலாற்றை அறியும்போது
முயற்சி என்றால் என்ன என்பதை கற்றுக்கொடுத்தீர்
இவ்வாறு தாங்கள் கற்றுத்தந்த பாடங்கள் வாழ்விற்கு மிகவும்
முக்கியமானவை என்பதை நாம் அறிவோம் அப்பப்பா
மத்தியஸ்தம் வசித்து பல பிணக்குகள் தீர்த்தீர்
கத்தக்குரல் கொடுத்தே காரியங்கள் முடிப்பீர்களாம்
இவற்றில் உங்கள் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும்
உங்களை ஒவ்வொரு செயலிலும்
நினைவுபடுத்திக்கொண்டே இருப்போம் அப்பப்பா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் ஆன்மா இறைவனின் திருவடிகளில் இளைப்பாற எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தயாபரன் குடும்பம்,**
**மூத்த பேர்த்தி - கயாழினி,**
**காயத்திரி.**

## குடும்பத்தார் புலம்பல்

நல்லதொரு மனிதனாக நின்று எங்கள் எல்லோருக்கும் பல சிறந்த வழி நடைகளை சொல்லித் தந்தீர்கள். முயற்சி என்பது என்ன என்பதை நன்கு கற்றுத்தந்தீர்கள். உங்கள் குடும்பத்திற்காக கடைசி வரையும் உண்மையாகவும், கடைமையாகவும் உழைத்து உயர்த்தினீர்கள். உங்களைத் தந்தையாக அடைந்தமைக்கு கடவுளுக்கு நன்றி.

உங்கள் அன்பையும் பல புத்திமதிகளையும் பேரப்பிள்ளைகள் என்றும் மறக்கமாட்டார்கள். உயிர் உள்ள பிராணிகளை நீங்கள் வீட்டில் வளர்ப்பதை அவர்கள் ரசிப்பார்கள். எங்கள் அப்பப்பா இளமையில் செய்த சாதனைகளைப் பலர் சொல்லிப் பெருமையடைவார்கள்.

எல்லா விதத்திலும் எங்களின் நல்ல ஒரு உறவை இழந்து விட்டோம் என நாங்கள் மிகவும் வருத்தப்படுகின்றோம். உங்கள் அபூர்வமான ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மகன் - சிறிதரன், மருமகள் - கௌரி,**
**பேரப்பிள்ளைகள் - ரிமாலினி, பிரதுர்ஷன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயகர் அகவல்



காப்பு

அற்புதவி நவயகர்தம் ஆசிரியர் பாவுரையைச்
சொற்பொருளின் குற்றமின்றிச் சொல்லவே முற்படுசீர்
சொற்கொருளெல் லாங்கடந்து தூய்தாம்மெஞ்ஞானமிகு
கற்பக விநாயகன்றான் காப்பு.

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாராக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
மும்பழம் நுகரும் முக்ஷிக வாகன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தில் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்மமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனி தெனக் கருளி
என்னை அறிவித்து எனக் கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளியிரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்தழுத்தி என் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின்னுள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கருத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக்கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

**விநாயகர் அகவல் முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

**தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி**
**அல்லலறுத் தானந்தமாக்கியதே எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவா சகமென்னும் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசனடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமா றொன்று அறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதியில்லாய் அனைத்துலகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப்புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய்யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்து உள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா மல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புரக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தர் சஷ்டி கவசம்

## திருப்பரங்குன்றுறை தீரன்

### *முதலாவது கவசம்*

காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்கு செல்வம் பலித்துக்கதித்(து) ஓங்கும்
நிட்டையும் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை.

குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

நூல்

திருப்பரங் குன்றுறை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா

குறுக்குத் துறையுறை குமரனே அரனே
இருக்குள் குருபரா ஏரகப் பொருளே
வையா புரியில் மகிழ்ந்துவாழ் பவனே

ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோ நமோ
ஐயா குமரா அருளே நமோ நமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழநியங் கிரிவாழ் பகவா நமோ நமோ
மழுவுடைய முதல்வன் மதலாய் நமோ நமோ
விராலி மலையுறை விமலா நமோ நமோ
மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ
சூரசம் காரா துரையே நமோ நமோ
வீரவே லேந்தும் வேளே நமோ நமோ
பன்னிரு கரமுடைப் பரமா நமோ நமோ
கண்களீ ராறுடைக் கந்தா நமோ நமோ
கோழிக் கொடியிடைக் கோவே நமோ நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம் ரீம்
வவவ வவவ வா ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூழ்
வவவ வவவ கௌம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருகநிஷ் களங்கனே வருக
தாயென நின்னிரு தாள்பணிந் தேன்எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினமும் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வராமல் தடுத்து
நல்ல மனதுடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்துநீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்தி கேயா
நந்தன் மருகா நாரணி சேயே
எண்ணில்லாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமி நாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்
தவக்கதிர் காமம் சார்திரு வேரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு
சன்னிதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக்(கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆடிய சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப்பொரு ளோனே
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவா போற்றி
அத்தன் அரியயன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரையுமாக் கலைகளும்
தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத் துள்ள புண்ணிய தீர்த்தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத்தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிஷ்டைகள் பலபல வெல்லாம்
கள்ளம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணெய்போல் எழிலுடைய உன்னை
அல்லும் பகலும் ஆசாரத்துடன்
சல்லாப மாய்உனைத் தானுறைச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள்வாயே
செந்தில் நகர் உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
அரன் மகிழ் புதல்வா ஆறுமுகா சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செந்தில் மேய கந்தவேள்

## *இரண்டாவது கவசம்*

**குறள் வெண்பா**

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

**நூல்**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்க வென்று வந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் செளவும்
உய்யொளி செளவும் உயிரையுங்கிலியும்
கிலியும் செளவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம் சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ கூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக்காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாவிற் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாகூஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முடியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் மண்ணரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதர் எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கை கால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறிய விக்ஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா குகனே கதிர்வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகியவேலா
செந்தில்மா மலையுறும் செங்கல்வ ராய!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப்பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலது அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும்வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பழநிப்பதியொளிர் பரமன்
### *மூன்றாவது கவசம்*

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணா சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா
பரமேசு வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக்கு அருள்வாய் வாமனன் மருகா
இரண்டாயிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டாரு கமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்கு அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழுவேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனை கொடுஞ்சிறை வைத்து
உறுபொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
சுருதிமெய் யோகம் சொல்லிய(து) ஒருமுகம்
அருள்பெறு மயில்மீ(து) அமர்ந்த ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய(து) ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த(து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோநம
பொருட்செந்தில் அம்பதி புரப்பாய் நமோநம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோநம
கூரகம் ஆவினன் குடியாய் நமோநம
சர்வசங் கரிக்குத் தனயா நமோநம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோநம
எல்லாக் கிரிக்கும் இறைவா நமோநம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூலவட்டத்தில் முளைத்தெழும் சோதியை
சால முக்கோணத் தந்தமுச் சக்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற்கோ ணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேசுரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன் மேல்
ஆகாச வட்டத்து தமந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் காட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்கமாய்க் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாவர்
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து சீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியன் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்(டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறுமுகமாய் அகத்துள்ளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன்விளை யாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரை திரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கணமாக
நினைத்த படிஎன் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க்(கு) இறங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுள்ளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்(து) ஆறு முகமும்
மாறா திருக்கும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்கத்
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னேவந்து
அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பலங் காரம்
வழுத்தும் என் நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியாக்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிரம் சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்கு உதவி
வல்லமை யோகம் வசீசர சக்தி
நல்ல உன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அனே கழுர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டாப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துர்க்கை பிடாரீ நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங்கு உருட்டி நொறுக்கி
சூலத்தால் குத்தித் தூளுதா ளுருவி
வேலா யுதத்தால் வீசிப் பருகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவி அக்கினியாத்தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டா யுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏக ரூபமாய் என்முன்னே நின்று
வாகனத்துடன் என் மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயாவம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடணம்
வம்பதாம் பேதுனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயிர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருபணி அட்சரம்
உந்தன் விபூதி யுடனே சபித்து
கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண் டியதும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சம்காரா
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருவேரகத்துறை பெருமான்

### *நான்காவது கவசம்*

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்டதுண் டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆண்மை நண்ணிடா(து) என்னைக்
காணநீ வந்து காப்பதுன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமார
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாட் சரமாய் எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
துவியட் சரத்தால் தொல்லுல(கு) எல்லாம்
அதிசய மாக அமைந்தவா போற்றி
திரியட் சரத்தால் சிவனயன் மாலும்
விரிபா ரூலகில் மேன்மையுற் றவனே
சதுரட் சரத்தால் சாற்றுநல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
பஞ்சாட் சரத்தால் பரமன் உருவதாய்த்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத்(து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அகன்ற மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவணை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும்ஆ யுதத்தால்
தரங்குழைத்(து) ஓடத் தாரகா சுரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவசே னாதிபதி
அஷ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித் திகளருள் ஈசன் புதல்வா
துட்டசம் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணண்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மாக
தைவமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அர்ச்சனை செய்ய அனுக்கிரகம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ(டு) என்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிவே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியோடு வாதமும் குன்மமும்
சூளைகா மாலை சொக்கலும் சயமும்
மூலரோ கங்கள் முடக்குள் வலிப்பு
திட்டு முறைகள் தெய்வத சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்நோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

முற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குன்றுதோறாடும் குமரவேள்

## *ஐந்தாவது கவசம்*

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வயானை மருவிய நாயகா
புள்ளி மயிலேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறுமுகவா
சண்முக நதியும் சராபன்றி மலையும்
பண்முகம் நிறைந்த பழநிக்கு இறைவா
ஆராறு நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழனி எங்கும் தழைக்கப்
பராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண் நீறணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப்பிரபைப்போல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநாயகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபோலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கம் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈசுவரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈஸ்வரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையாள் எடுத்துக் கனமார்(பு) அணைத்தே
ஐயா குமரா அப்பனே என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்தி கேயாஎனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா வருகவென்(று)
அந்நேரம் வட்டமிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரத்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியாய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரபுர பவவெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலக்கிய பாதமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்
வாயில்கள் மோழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலம் நலரோ மபந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புழுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர்கத் தூரியும்
வலம்புரிச் சங்கொளி மணியணி மிடறும்
நலம் சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வல்லாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழை பங்காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்டபயிரவர் ஆனந்தமாட
துஷ்ட மிகுஞ்சூளிகள் சூழ்திசை காக்க
சத்தரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்ன
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்ததா ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லட்சுமி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன் நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் செயசெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசிச்
சார்ந்தனம் என்னச் சார்வரும் அநேக
பூதம் அடிபணிந் தேத்த வேதாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட
அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடை விடாமல் உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன் மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீர மயிலேறி வெற்றிவேல் எடுத்துச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற குலத்தை அறுத்துச் சரித்து
விடவே லாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும்சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்ப்பதி செந்தூர்
திருவாவி னன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவும் கயிலை
கண்ணிய மாவூற்று கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்
பதினா லூலகத்தினிலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவ னாயிருந்(து) அடியார்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக்(கு) அருள் சண்முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழமுதிர்ச்சோலை கதிரோன்

## *ஆறாவது கவசம்*

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தானே
அழகுவேல் ஏத்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வாகனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
தகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய்த் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவ்வும் ணவ்வும் பழமுதிர்சோலையில்
தவ்விய ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்.
கொஞ்சிய உமையுடன் குழவியாய் சென்றங்(கு)
அஞ்சலி செய்தவள் அமுதம் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடைய வீரவாகுவோ(டு) ஒன்பதுன்
தம்பிமா ராகத் தானையைக் கொண்ட
சம்பிர தாயா சண்முக வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன்அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப்படவே
மமதையாய் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்க வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து புரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைத்த
நயமுடன் விடுத்த ஞானபண்டிதனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைமகளுடனே
அறுவரோர் அம்சமாம் அரக்கரை வெல்ல
அறுமுகத்துடன் அவதரித்தோனே
சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கொல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ வமரர்கள் தமக்குச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனாபதியாய்த் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினார் சமயம் அறிந்தங்(கு)
இன்பம் கொடுக்கும் ஏழைபங்காளா
கும்பமா முனிக்கு குரு தேசிகனே
தேன்பொழி பழநித் தேவ குமார
கண்பார்த்(து) எனையாள் கார்த்திகேயா என்
கஷ்டநிஷ்டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட்சுமிவாழ் அருளெனக்(கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருணகிரிதனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்கு கடாட்சித் தருள்வாய்
தேவராஜன் செப்பிய கவசம்
பூவலயத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசம் தான்செபிப் போரைச்
சிட்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்த் திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் தமிழ்தரும் அரனே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்

**(ஆறுகவசங்களும் முற்றுப்பெற்றன.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

திருச்சிற்றம்பலம்

வெண் தாமரைக்கு அன்றி நின் பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்து
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழு மளித் (து)
உண்டான் உறங்க ஒழித்தான்
பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடும்கொலோ
உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாபமயிலே
சகல கலாவல்லியே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 4

பஞ்சப்பி இதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே
நெடுந் தாட்கமலத்து
அஞ்சத் துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுது எளிது எய்த
நல்காய் எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பர்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய்
உளம் கொண்டு தொண்டர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. 7

சொல்விற் பணமும் அவதானமும்
கவி சொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமை
கொள்வாய் நளின ஆசனம் சேர்
செல்விக்கு அரிதென்று ஒரு காலமும்
சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி
உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கௌரி காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாகப் புனைவதற்கு
என்னின் றருள் செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வராமற் கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியாரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமங்கள் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறுபோட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைந்தல்லோ சீர் விரதம் நீயிருந்தாய்
பரனை நினைந்தல்லோ பதி விரதம் நீயிருந்தாய்
அரனை நினைந்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள் மாரி பொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையை தந்து விடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியாரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்க வென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடன் தாருமம்மா
கல்வி சிறப்தற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுந்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சக்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போறிறிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

**கௌரி காப்பு முற்றிற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவக் கடவுள் தியானம்

**திருச்சிற்றம்பலம்**

பரமனை மதித்திடாப் பங்கை ஆசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற் கழல்க ளேத்துவாம்.

**அர்ச்சனை**

பிரமன் தன் சிரமரிந்த பெருமானே போற்றி
இரப்பதற்கு ஒருதலையை உடையானே போற்றி
கணங்கனொரு வாகனமாம் உடையானே போற்றி
அணங்காகக் காளியை உடையானே போற்றி
அமலனுக்கு ஒரு மைந்தனாய் வந்தவரே போற்றி
இமவான்கன் புத்திரியின் புத்திரனே போற்றி
கையொன்றில் திரிசூலம் உடையவரே போற்றி
மைஒழுகு கண்ணுக்கு மகனாரே போற்றி
அம்மை சிவகாமி பாலனே போற்றி
இம்மையிலே எல்லாந் தந்தவனே போற்றி 10

அடியவருக்கு எளிமையாய் வந்தவனே போற்றி
முடியுடைய வேந்தருக்கும் முதல்வனே போற்றி
படியினிலே பாவங்கள் அறுப்பாய் போற்றி
மிடியுடையார் மிடியினை மடிப்பவனே போற்றி
கந்தனுக்கு முன் வந்த கருணாமூர்த்தியே போற்றி
எந்தனுக்கு அருள்புரிய வந்தவரே போற்றி
கணபதிக்குப் பின்வந்த கபாலியே போற்றி
கணப்பொழுதில் வினைகளைச் சாடிடுவாய் போற்றி
காசினியோர் தொழுது இருந்த கடவுளே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசினிய பெருமானே பெரியானே போற்றி
தாரணியில் உயிர்வாழ வந்தவரே போற்றி
நார்ணர்க்கும் நான்முகர்க்கும் நாயகனே போற்றி
ஆரணங்க ளறியாத ஐயனே போற்றி
மாரனை வென்றெடுத்த மதியனே போற்றி
அகண்டபரி பூரணனாம் ஐயனாரே போற்றி
மகரிஷிகள் போற்றுகின்ற மாமணியே போற்றி
அம்மை சிவகாமி பாலகனே போற்றி
மும்மைக்கும் முதலாக உள்ளோனே போற்றி
ஆதி அந்தம் இல்லாதவரே போற்றி
பாதி மதி வேணியன் மகனே போற்றி

அண்டமெல்லாங் கடந்த அருட்சுடரே போற்றி
மண்டினி ஞாலத்தை மகிழ்விப்பவரே போற்றி
சிவமூர்த்த மாக நின்றவரே போற்றி
பல வினைகள் எல்லாம் ஒழிப்பவரே போற்றி
பைவரர்கள் வணங்கும் பகவானே போற்றி
வைரவர் என்னும் பெயருடையோய் போற்றி
வடுகாய நம என்று வணங்கிடுவோம் போற்றி
சுடுகாட்டில் நடமாடும் சூலபாணியே போற்றி
பைரவ புவனத்தில் இருப்பவரே போற்றி
பாதாள ஞான வைரவரே போற்றி

தோற்றத்தில் நீலநிறம் உடையவரே போற்றி
ஆற்றலிலும் அம்மானை வென்றவரே போற்றி
திருவடியில் சிலம்பினை அணிந்தவரே போற்றி
அருள்மறைகள் ஆறு அங்கம் உணர்ந்தவரே போற்றி
மார்பிலே தலைமாலை உடையவரே போற்றி
கார்போன்ற நிறத்தை உடையவரே போற்றி
மழுவென்னும் ஆயுதம் உடையவரே போற்றி
அழுதார்க்கு அருள்புரியும் ஆண்டவரே போற்றி
பாசம் எனுங் கயிற்றை உடையவரே போற்றி
பாச வேரறுக்கும் பகவானே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுக்கையை ஏந்தி ஒலிப்பவரே போற்றி
முக்கண்கள் உடைய முதல்வனே போற்றி
கடுக்கை மாலை பூண்டவரே போற்றி
எக்காலம் எம்மைக் காப்பவரே போற்றி
பயங்கரத் தோற்றம் உடையவரே போற்றி
வியத்தக்க அற்புதங்கள் செய்தவரே போற்றி
கோரப் பற்களினை உடையவரே போற்றி
வீரவேல் முருகனுக்குத் தமையனாரே போற்றி
செஞ்சடையை உடைய சேவகனே போற்றி
நஞ்சு அணி கண்டனின் நன்மகனே போற்றி 60

சீற்றநகை கொண்ட முகமுடையோய் போற்றி
ஏற்றமெல்லாம் எமக்குஅளிக்கும் நாயகனே போற்றி
ஆணவத்தை அடக்கிய ஆண்டவனே போற்றி
நாணத்தை நமக்களித்த நாயகனே போற்றி
முனிவர்களின் செருக்கை முனிந்தவனே போற்றி
நனிபெரிதும் ஞானத்தை அளித்தவனே போற்றி
தேவர்களின் அகங்காரம் அழித்தவனே போற்றி
பாவவினை பற்றறுக்கும் பகவானே போற்றி
ஊழிக்காலத்தில் உலகினை அழிப்பவரே போற்றி
ஆழியிலும் எம்மை அணைப்பவரே போற்றி 70

நான்மறையே நாய்வடிவாய் ஆனவரே போற்றி
கான் முளையாம் எம்மைக் காத்தருள்வாய் போற்றி
அறுவகைச் சமயத்தில் பைரவரே போற்றி
நறுமலர் மாலையை அணிபவரே போற்றி
வடைமாலை தன்னை விரும்புபவரே போற்றி
நடைபாதை தன்னையும் நயந்தவரே போற்றி
புளியடியும் புங்கடியும் இருப்பவரே போற்றி
தெளிவுடையார் உள்ளத்து இருப்பவரே போற்றி
அரசடியும் ஆலடியும் அமர்பவரே போற்றி
பரஞானம் தந்தருளும் பரமனே போற்றி 80



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலுக்கு ஒரு தெய்வம் ஆனவரே போற்றி
ஏவலுக்கும் இயைந்து எமைக் காத்தவரே போற்றி
ஷேத்திர பாலகர் ஆனவரே போற்றி
ஏத்தி எழுவார்க்கு அன்பர் ஆனவரே போற்றி
பெருந்தொந்தி உடைய பெம்மானே போற்றி
அருமறைகள் ஓலமிடும் ஆண்டகையே போற்றி
உருண்ட கண்கள் உடையவரே போற்றி
மகுண்ட மனத்தை மலர்விப்பவரே போற்றி
ஆடை எதுவுமற்ற பெருமானே போற்றி
ஓடையிலே ஊறிவரும் அருஞ்சுனையே போற்றி 90

அரவ அணிகலன்கள் அணிந்தவரே போற்றி
பரவ இனியவரே பகவானே போற்றி
எண்ணெட்டு மூர்த்தங்கள் இசைந்தவரே போற்றி
மண்ணரும் விண்ணரும் மகிழ்ந்தவரே போற்றி
அசிதாங்க பைரவர் ஆனவரே போற்றி
பசிதீர்க்க வந்தருளும் பகவானே போற்றி
குருபைரவர் ஆகிநின்ற கோமானே போற்றி
அருமறைக ளுக்கும் எட்டா ஆண்டவனே போற்றி
கண்ட பைரவர் ஆனவரே போற்றி
கண்ட இடமெல்லாம் கருணை செய்வாய் போற்றி 100

குரோத பைரவர் ஆனவரே போற்றி
விரோதம் ஒன்றில்லா விழுத்துணையே போற்றி
உன்மத்த பைரவர் ஆனவரே போற்றி
ஜென்மத்திலும் உமைமறவேன் தெய்வமே போற்றி
கபால பைரவர் ஆனவரே போற்றி
சபாபதியின் மைந்தன் ஆனவரே போற்றி
சபரிமலை ஐயப்பா சரணம் சரணம்
வடுகாய நம ஓம் வடுகாய போற்றி 108

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாடு

### சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

### சந்திரன்

எங்கள் குறைக ளெல்லாந் தீர்க்கும்
திங்களே போற்றி சுந்தரா தருவாய்
சந்திரா போற்றி சத்துரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

### செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு.

### புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதுபக வானே பொன்னடி போற்றி
பதந்தந் தாள்வாய் பண்ணொலி யானே
உதவியே யருளும் உத்தமா போற்றி.

### வியாழன்

குணமிகு வியாழக் குருபக வானே
மனமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப் பாகுரு தேசா
க்ரக தோசமின்றிக் கடாசித் தருள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெள்ளி

சுக்ர மூர்த்தி சுகமிக யீவாய்
வக்ர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளி சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே.

### சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்கலம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா.

### இராகு

அரவெனும் இராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஸ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
இராகுக் கனியே ரம்மியா போற்றி

### கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரட்சி

**நவக்கிரக வழிபாடு முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கிருஷ்ண கவசம்

அகரம் முதலே அழியாப் பொருளே
ஆயர் குலமே நேயர் கரமே
இகமும் பரமும் இணையும் இடமே
ஈதல் மரபாம் இதயத் தவமே
உலகுக் குடையே உயிரின் கலையே
ஊதும் குழலின் வேதப் பொருளே
எரியும் கனலில் தெரியும் புனலே
ஏழை மனதில் வாழும் அருளே
ஐயம் தீர்க்கும் அறிவுக் கதிரே
ஐவர் துணையே அன்புச் சிலையே
ஒளியே விழியே உயிரே வழியே
ஓடும் நதியின் பாடும் அலையே
அவ்வவ் வுலகை ஆக்கும் நிலையே
அடியேன் சரணம் சரணம் சரணம்
அறமே அறமே அறமே அறமே
திறமே திறமே திறமே திறமே
தவமே தவமே தவமே தவமே
வரமே வரமே வரமே வரமே
வேதம் விளையும் வித்தே விளைவே
நாதம் பொழியும் நலமே நிலமே
ஓதும் பொழுதே உடனே வருவாய்
உள்ளம் கேட்கும் வெள்ளம் தருவாய்
அறியாக் கவலை அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
பொய்யா மொழியே பொங்கும் நிலவே
பூமிக் குடையின் காவற் பொருளே
பார்த்தன் பணியும் பாதம் காக்க
பாஞ்ச சன்னியம் பக்தனைக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடர்கள் தமையும் மோகனன் காக்க
முள்ளில் மலராய் முளைத்தோன் காக்க
வாடும் உயிரை மன்னன் காக்க
தேடும் விழியைத் திருமால் காக்க
கேலிப் பொருளை கிருஷ்ணன் காக்க
கண்ணீர் நதியை கண்ணன் காக்க
துன்பம் என்றொரு சுமையைத் தீர்க்க
தூயோன் வருக துணையே வருக
மாதர் கற்பும், மடவார் நோன்பும்
மாயோன் காக்க மலைபோல் வருக
தகிடத் தகிடத் தகிடத் தகவென
தறிபடு துன்பம் தறிகெட ஓட
திகடத் திகடத் திகடத் திகட
திசைவரு கவலை பகையிலதாக
துருவத் துருவத் துருவத் துருவிட
தொலையாப் பொருளே அலையாய் வருக
நிஷ்காமத்தில் நிறைவோன் வருக
கர்ம சத்யாசக் களமே வருக
ஞானம் யோகம் நல்குவன் வருக
நல்லோர் வாழ்வில் நலமே நிறைக
அடியேன் துயரம் அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
பொங்கும் வேலும் புண்ணாக்காது
தாங்கும் தலைவன் தாமரைக் கண்ணன்
தாளில் விழுந்தேன் சரணம் சரணம்
மதுசூதனனே மனிதன் சரணம்
இருடிகள் நேசா இயலான் சரணம்
கீதாச்சாரிய கிருஷ்ணா சரணம்
வேதாச்சாரிய வேந்தே சரணம்
தேவகி மைந்தன் சிறியேன் சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசோத குமரா அடியேன் சரணம்
உன்னை விட்டொரு உறவுகள் இல்லை
என்னை விட்டொரு இனியவன் இல்லை
நம்மை விட்டொரு நண்பர்கள் இல்லை
நன்மையில் உன்போல் நாயகனில்லை
எங்கெங்கே நான் இருந்திடும் போதும்
அங்கங்கே நீ அருள் செய்ய வருக
கோசலை ஈன்ற குமரா வருக
கோதையின் மாலை கொண்டவன் வருக
ரகு வம்சத்தின் நாயகன் வருக
யது வம்சத்தின் யாதவன் வருக
மதுவை வென்ற மாதவன் வருக
திருப்பதி யாளும் திருமால் வருக
திருவரங்கத்துப் பெருமாள் வருக
இராவணன் கொடுமை தீர்த்தாய் துன்பம்
இராவணம் எமக்கும் இன்னருள் புரிக
கம்சன் கொடுமை களைந்தோய் வருக
காலனை வெல்லக் கைவலி தருக
நெற்றியில் திருமண் நெஞ்சில் வைரம்
காதில் குண்டலம் கையில் வில்லொடு
தண்டைக் காலில் சலங்கை குலுங்க
அண்டையில் வந்து அருளே புரிக
கௌரவர் தம்மைக் களத்தில் வென்றாய்
கௌரவம் காக்க கண்ணா வருக
பார்த்தன் மகிழப் பாடஞ் சொன்னாய்
படித்தவன் மகிழப் பரமே வருக
மூன்று குணங்கள் முறையாய்க் கூறிய
சான்றோன் பாதம் தாவி அணைத்தேன்
சிக்கென உன்னைச் சேர்த்துப் பிடித்தேன்
பக்கென உன்தன் பாதம் பற்றினேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்கென நின்று குறி வைத்திருந்தேன்
அக்கணம் வந்தாய் அடியில் விழுந்தேன்
இக்கணம் என்னை ஏங்கவிடாமல்
தக்கவனே நீ தயவுடன் அருள்க
கல்லாய் போனவள் உன் காலடிபட்டு
பெண்ணாய் ஆகிப் பிழைத்தனள் அன்று
உன்னால் தானே உலக இயக்கம்
கண்ணனில்லாமல் கடல் வான் ஏது
கண்ணனில்லாமல் கடவுளுமில்லை
கண்ணனில்லாமல் கவிதையுமில்லை
கண்ணனில்லாமல் காலமுமில்லை
கண்ணனில்லாமல் காற்றே இல்லை
எத்தனை பிறவி எத்தனை பிறவி
அத்தனை பிறவியும் அடியேன் கொண்டால்
சத்தியநாதன் தாள்களை மறவேன்
தத்துவக் கண்ணன் தனிமுகம் மறவேன்
உன்னை நம்பி உன்னையே சேர்ந்தால்
பிறவிகளில் நீ பேசிய பேச்சு
உலகில் போதும் ஒருமுறை மூச்சு
உன்னிடம் சேர்த்து உன் வடிவாக்கு
இங்கே நாங்கள் இருக்கும் வரையில்
சங்கு முழங்கு தர்மம் நிலைக்க
பிள்ளைகள் வாழ்க்கை பிழையாகாமல்
மனையவள் வாழ்க்கை மாண்பு கெடாமல்
இல்லை என்றொரு நாளில்லாமல்
இன்னும் எனும் ஆசை வராமல்
தொல்லை என்பது துளியுமில்லாமல்
தொற்றும் நோய்கள் பற்றிவிடாமல்
முதுமைத் துயரம் மூண்டுவிடாமல்
படுக்கையில் விழுந்து பரிதவிக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை கெட்டு திறமையும் கெட்டு
நிந்தனை பெற்று நீங்கிவிடாமல்
என்றும் பதினாறு இளமை வழங்கு
இப்பணி தொடர அற்புதம் காட்டு
தளரா மேனியில் சக்தியைக் கூட்டு
தாய் போல் இருந்து சாதம் ஊட்டு
வாழ்ந்தால் இப்படி வாழ்வது நன்றென
ஊரார்க்கென்னை உதாரணம் காட்டு
உலகில் ஒருவன் உத்தமன் இவனென
உயிர்கள் பேசிடும் ஒரு நிலை கூட்டு
சிறியவர் பெரியவர் வறியவர் செல்வர்
சரி சரி சரியென தலையை அசைக்க
பொலி பொலி பொலியென புகழும் விளங்க
மள மள மளவென மனையிருள் நீங்க
கல கல கலவென காசுகள் சேர
தள தள தளவென தர்மம் தழைக்க
வர வர வரவென வாய்ப்புகள் வாய்க்க
ரகுபதி பசுபதி நன்மைகள் அருள்க
ஐயா சரணம் சரணம் சரணம்
அடியேன் வாழ்வில் நீயே கவசம்
வந்தது வாழ்வில் மன்னவன் கவசம்
வாழ்க்கை என்னும் கோபுரக் கவசம்
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனிடம் எதையும் தருவோம் தருவோம்
ஜெய ஜெய ராமா ஜெய ஜெய கிருஷ்ணா
ஜெய ஜெய ஜெய ஜெய ஜெயஜெய ஜெயஜெய.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாய் அபிராமியே

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழு வார்க்கொரு தீங்கில்லையே.

தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு அறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

விரும்பித் தொழும் அடியார் விழிநீர்மல்கி, மெய்ப்புளகம்
அரும்பித் ததும்பிய அனந்தம் ஆகி, அறிவு இழந்து,
கரும்பின் களித்து, மொழி தடுமாறி, முன்சொன்ன எல்லாம்
தரும்பித்தர் ஆவர் என்றால் - அபிராமி சமயம் நன்றே!

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியு லாத உடலும்
சலியாத மனமும் அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்புமுத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலைஆழி ஆறுதுயில்கொள் மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமகள் துதி

நித்தமுனை வேண்டி மனம்
நினைப்பதெல்லாம் நீயாய்ப்
பித்தனைப் போல் வாழ்வதிலே
பெருமையுண்டோ? திருவே!
சித்தவுறுதி கொண்டிருந்தார்
செய்கையெல்லாம் வெற்றி கொண்டே
உத்தமநிலை சேர்வ ரென்றே
உயர்ந்த வேதம் முரைப்பதெல்லாம்
சுத்த வெறும் பொய்யோடீ?
சுடர் மணியே! திருவே!
மெத்த மையல் கொண்டு விட்டேன்
மேவிடுவாய், திருவே!

உன்னையன்றி இன்பமுண்டோ
உலகமிசை வேறே?
பொன்னை வடிவென்றுடையாய்
புத்தமுதே, திருவே!
மின்னொளி தரும் நன் மணிகள்
மேடையுயர்ந்த மாளிகைகள்
வண்ண முடைய தாமரைப்பூ
மணிக்குள முள்ள சோலைகளும்
அன்னம் நறுநெய் பாலும்
அதிசயமாய்த் தருவாய்
நின்னருளை வாழ்த்தி என்றும்
நினைத்திருப்பேன், திருவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுகளும் மாடுகளும்
அழகுடைய பரியும்
வீடுகளும் நெடு நிலமும்
விரைவினிலே தருவாய்
ஈடு நினக்கோர் தெய்வமுன்டோ?
எனக்குனை யன்றிச் சரணுமுண்டோ?
வாடுநிலத்தைக் கண்டிரங்கா
மழையினைப் போல் உள்ளமுண்டோ?
நாடு மணிச் செல்வமெல்லாம்
நன்கருள்வாய் திருவே!
பீடுடைய வான் பொருளே
பெருங்களியே திருவே!

## ஷீரடி சாய்பாபாவிற்கு முதன்முறையாக எழுதப்பட்ட மந்திரம் இது

ஓம் நமோ பகவதே சாயிநாதாய!
அமிர்த வாக்கிய வர்ஷாய!
சகல லோக பூஜிதாய!
சர்வ தோஷ நிவாரணாய!
ஷீரடி வாசாய!
சாயி நாதாயதே நமஹ:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே யென்னே
ஈதே எந் தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

4

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணரா உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.

6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தொன்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
எழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனைப் பாடேலோர் எம்பாவாய்.

8

முன்னைப் பழும்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார்தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக் கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோ மேலோர் எம்பாவாய்.

9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதோர் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகே ரெனக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற்காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப் பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

13

காதார் குழையாடப் கைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள் விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.

18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்றுரைப்போங் கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லாதோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்.

19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

20

திருவெம்பாவை முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்தியசாய்பாபா அஷ்டோத்திர நாமவளி

ஓம் ஸ்ரீபகவான் ஸத்தியஸாயி பாபாய நம :
ஓம் ஸாயி ஸத்திய ஸ்வரூபாய நம :
ஓம் ஸத்திய தர்ம பாராயணாய நம :
ஓம் வரதாய நம :
ஓம் ஸத்துருசாய நம :
ஓம் ஸத்ய குணாத்மனே நம :
ஓம் ஸாது வர்த்தனாய நம :
ஓம் ஸாது ஜன போஷனாய நம :
ஓம் ஸர்வக்ஞாய நம :
ஓம் ஸர்வ ஜனப் ரியாய நம :

ஓம் ஸர்வசக்தி மூர்த்தயே நம :
ஓம் ஸர்வேஸாய நம :
ஓம் ஸர்வசங்க பரித்யாகினே நம :
ஓம் ஸர்வாந்தர் யாமினே நம :
ஓம் மஹிமாத்மனே நம :
ஓம் மஹேஸ்வர ஸ்வரூபாய நம :
ஓம் பர்த்தி கிராமோற்பவாய நம :
ஓம் பர்த்தி ஸக்த்ர நிபாசினே நம :
ஓம் யசகாய ஷீரடி வாசினே நம :
ஓம் ஜோடி ஆதிப்பள்ளி ஸோமப்பாய நம :

ஓம் பாரத்வாய ரிஷி கோத்ராய நம :
ஓம் பக்த வத்ஸலாய நம :
ஓம் அபாந்தராத்மனே நம :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸாயி அவதார மூர்த்தயே நம :
ஓம் ஸர்வபய நிவாரிணே நம :
ஓம் ஆபஸ்தம்ப ஸுத்ராய நம :
ஓம் அபயப்ரதாய நம :
ஓம் ரத்னகர வம்சோத்பவாய நம :
ஓம் ஷீரடி ஸாயி அபேத ஸக்த்யாவதாராய நம :
ஓம் சங்கராய நம :

ஓம் ஷீரடிசாயி மூர்த்தயே நம :
ஓம் த்வாரகா மாயிவாசினே நம :
ஓம் சித்ராவதி தடபுட்டபர்த்தி விஹாரிணே நம :
ஓம் ஸக்திப்ரதாய நம :
ஓம் ஸரனாகத த்ராணாய நம :
ஓம் ஆனந்தாய நம :
ஓம் ஆனந்ததாய நம :
ஓம் ஆர்த்தத்ரான பராயநாய நம :
ஓம் அனாத நாதாய நம :
ஓம் அழஹாய ஸஹாயாம நம :

ஓம் லோகபாந்தவாய நம :
ஓம் லோகரட்ஸ பாராயணாய நம :
ஓம் லோக நாதாய நம :
ஓம் தீணஜன போசணாய நம :
ஓம் மூர்த்தித்ரய ஸ்வரூபாய நம :
ஓம் முக்திப்ரதாய நம :
ஓம் கலூஸ மிதூராய நம :
ஓம் சர்வா தாராய நம :
ஓம் ஸாயி ஸர்வ க்ருத்வாஸினே நம :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சர்வ புண்யபல பரதாய நம :
ஓம் சர்வ பாப க்ஸயஹரராய நம :
ஓம் சர்வ ரோக நிவாரிணே நம :
ஓம் ஸர்வபாத ஹநாய நம :
ஓம் அனந்தநுத ஹர்த்ருணே நம :
ஓம் ஆதி புருஸாய நம :
ஓம் ஆதி சக்தியே நம :
ஓம் அபரூ சக்தினே நம :
ஓம் அவ்வியக் தரூபிணே நம :
ஓம் காமக்ரோத த்வம்ஸினே நம :

ஓம் கனகாம்பரதாரினே நம :
ஓம் அத்பு தஸர்தாய நம :
ஓம் ஆபத்பாந்தவாய நம :
ஓம் ப்ரேமாத்மனே நம :

ஓம் ப்ரேம மூர்த்தயே நம :
ஓம் ப்ரேம ப்ரதாய நம :
ஓம் ப்ரியாய நம :
ஓம் பக்த ப்ரியாய நம :
ஓம் பக்த மந்தாராய நம :
ஓம் பக்த ஜனகத்ருதய விகாராய நம :

ஓம் பக்த ஜனக்ருதயாலயாய நம :
ஓம் பக்த பாராதீனாய நம :
ஓம் பக்தி ஞான ப்ரதீபாய நம :
ஓம் பக்தி ஞான ப்ரதாய நம :
ஓம் ஸுக்ஞான மார்க்கத்தர்ஸகாய நம :


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸாயிஞான ஸ்வரூபாய நம :
ஓம் கீதாபோதகாய நம :
ஓம் ஞான சித்திதாய நம :
ஓம் சுந்தர ரூபாய நம :
ஓம் புண்ய புருஷாய நம :

ஓம் பலப்ரதாய நம :
ஓம் புருஸ்த்தமாய நம :
ஓம் புராண புருஷாய நம :
ஓம் அதிதாய நம :
ஓம் கலாநீதாய நம :
ஓம் சித்தி ரூபாய நம :
ஓம் சித்த சங்கல்பாய நம :
ஓம் ஆரோக்கிய ப்ரதாய நம :
ஓம் அன்னவஸ்தராய நம :
ஓம் சம்சாரது ஹக்ஸயஹராய நம :

ஓம் சர்வாபீஸ் ப்ரதாய நம :
ஓம் கல்யாண குணாய நம :
ஓம் கருமத் வம்சினே நம :
ஓம் ஸாதுமானச சோபிதாய நம :
ஓம் ஸர்வமத ஸம்மதாய நம :
ஓம் ஸாது மானச பரிசோதகாய நம :
ஓம் ஸாதுக்கிரஹ வடவ்ருக்ஸப்ரதீஸ்டா பகாய நம :
ஓம் சகல சம்ஸயஹராய நம :
ஓம் சகல தத்வ போதகாய நம :
ஓம் யோகீச்வராய நம :
ஓம் யோகீந்தாவந்தீதாய நம :
ஓம் ஸாந்தரூபாய நம :


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸாயிநாதாய நம :

ஓம் ஸாயிஸர்வமங்களாஹரராய நம :

ஓம் சர்வசித்தி ப்ரதாய நம :

ஓம் ஆபத்நிவாரினே நம :

ஓம் சாந்தமூர்த்தியே நம :

ஓம் ஸலப ப்ராஸண்நாய நம :

ஓம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பகவான் ஸத்ய ஸாயி பாபாய நம
மங்களம் மங்களம் மங்களம்

நீ எங்கு சென்றாலும் என் கடமையைச் செய்

உன்னுள் இருந்து நான் வழிகாட்டிக்கொண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்துகொள். ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் போதும் நான் உன்னுடன் இருக்கிறேன். வர இருக்கும் வருடங்களில் என்னைப் பல வடிவங்களில் உன்னால் உணர முடியும். நீ என்னுடையவன். எனக்கு மிகவும் நெருக்கமானவன். கண் இமைகள் விழியைக் காப்பதுபோல் நான் உன்னைக் காப்பாற்றுவேன். நான் உன்னை என்றும் விட்டு விலகமாட்டேன். நீயும் என்னை விட்டு விலக முடியாது. இந்த நிமிடத்திலிருந்து எதையும் எதிர்பார்த்து செயற்படாதே. மாறாதா அன்புடன் உன் கடமையைச் செய். எல்லாவற்றிலும் இறைவனைக் காணக் கற்றுக்கொள். பொறுமையுடன் இரு. சரியான நேரத்தில் உனக்கு எல்லாம் அளிக்கப்படும். மகிழ்ச்சியாய் இரு. எதைப் பற்றியும் கவலைப்படவேண்டாம். எது நடந்தாலும், எதை அனுபவித்தாலும் என் சங்கல்ப்பத்தினாலே நடைபெறுகிறது என்பதை புரிந்துகொள். நான் இவ்வுலகத்திற்கு வந்துள்ள அவதார நோக்கத்தை தடுத்து நிறுத்தவோ, தாமதப்படுத்தவோ எந்த சக்தியாலும் முடியாது. கண் முன்னே விரிய இருக்கும் பொற்காலத்தில் புனித ஆத்மாவாகிய நீ ஆற்ற வேண்டிய பணிகள் இருக்கின்றன. அதைப் புரிந்துகொள்.

- பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
24.03.1934

மறைவு
27.06.2022

அமரர்

# கந்தசாமி கணேசராசா

(சிறைச்சாலை உதவி அத்தியட்சகர், சமாதான நீதவான், அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்)

நிமிர்ந்த நடை நேர்கொண்ட பார்வை
யகத்தில் யார்க்கும் அஞ்சா ஞானச்செருக்கனாய்
நுணியில் வாழ்ந்தீர் நயவுடன் இருந்தீர்
கட்டுக்கோட்டை மண்ணுதித்து மூளாய் ஊரில் முகத்தார் மகளை மணந்து
மும்மொழி அறிவொடு மகவைபெற்று பீடுடன் வாழ்ந்தீர்
உம் சிந்தனையினில் சிறைச்சாலை அடங்கும்
மும்மொழி அறிஞனாய் முடிசூடா மன்னாய்
இணக்கசபையை இலங்கையிற் தோன்ற
இதய சுத்தியோடு இறுமாப்பாய் உழைத்தீர்
சமாதான நீதவானாய் நுணியில் வாழ்ந்து
நயவுடன் பல சத்தியப்பிரமாணங்களை செய்தீர்
மொழித்திறன் மூட்டுறுத்து மும்மொழியும் கசடறக்கற்று
இலக்கணப் பிழையற்று மொழிபெயர்த்து தருவீர்
எவன் வந்தாலும் உதவிகள் செய்வீர்
உரிய பணியை உயர்வாய் செய்வீர்
நீர் செய்த சேவையின் பயனாய் இறுதிக்காலத்தில்
திடமுடன் வாழ்ந்து மாண்புடன் மறைந்தீர்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
மூளாய் மேற்கு
ஐக்கிய நாணய சங்க நிர்வாகசபையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
24
.
03
.
1934



மறைவு
27
.
06
.
2022

## அமரர். கந்தசாமி கணேசராசா அவர்கள்

**(சிறைச்சாலை உதவி அத்தியட்சகர், சமாதான நீதவான், அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்)**

அராலி – கொட்டைக்காட்டைப் பிறப்பிடமாகவும், மூளாய் தண்ணித்தொட்டியடியை வசிப்பிடமாகவும் கொண்ட எனது பள்ளிநண்பன் தயாபரன், எங்கள் இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் சிறீதரன், கருணாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகரையும் ஸ்ரீ முத்துக்குமார சுவாமியையும் மனதால் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தங்க. முகுந்தன் குடும்பம்

மூளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
24.03.1934







மறைவு
27.06.2022

மன்ற முன்னாள் உறுப்பினர் சிறிதரன், கருணாகரன், ஆகியோரின் அன்புத்தந்தையார்

அமரர்

# கந்தசாமி கணேசராசா

(சிறைச்சாலை உதவி அத்தியட்சகர்,சமாதா நீதவான்,அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்)

மௌனங்கள் சூழ்ந்துகொள்ள
மனங்கள் மௌனம் கொள்ள
உங்களைப் பார்த்திருந்த விழிகள்
கண்ணீரால் கரை புரள
உங்களை இழந்ததால்
எங்கள் மனம் துடிக்குதய்யா
விலகிவிட்ட உங்கள்
ஆத்மா சாந்தியடைய
இறைஞ்சுகின்றன இதயங்கள்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
இந்து இளைஞர் மன்றம்,
ஆனாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

நம் குடும்பத்தலைவர்

கந்தசாமி கணேசராசா அவர்களின்

மறைவு கேட்டு ஓடி வந்து ஆறுதல் வார்த்தைகள் கூறியோருக்கும், இறுதிக் கிரிகைகளுக்கு உதவி புரிந்தோர்க்கும், இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்டோர்க்கும், அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டோர், ஆத்ம சாந்திக் கிரிகைகளில் பங்கு கொண்டோருக்கும், தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் வேறுபல உதவிகளை செய்தோருக்கும் இம்மலரை சிறப்புற அச்சிட்டுத் தந்த றூபன் அச்சகத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

*** கந்தசாமி + * சின்னம்மா**

- * கணேசராசா
- * மங்கையர்க்கரசி
- * வரதராசா
- * நாகநாதர்
- பத்மநாதன்

*** ஆறுமுகம் + * நகுலாம்பிகை**

- அன்னரெத்தினதேவி
- * இந்திராணி
- ஞானரஞ்சிதமலர்
- * சிவகுமார்

*** கணேசராசா + * இந்திராணி**

- தயாபரன் + கலாராணி → கஜாழினி, காயத்திரி
- சிறிதரன் + கௌரி → நிமாலினி, பிரதுர்ஷன்
- * கருணாகரன்

* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொருநாள் அது
வேறொருவருடையதாகின்றது.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றூபன் பிறிண்டேர்ஸ்,
ஆனைக்கோட்டை.